பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 12 வெள்ளிக்கிழமை 25.03.2022 கதிர் 09

## யாழ். நகரப் பகுதியில்
## சைக்கிள் திருடிய இளைஞர் கைது!

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் சைக்கிளைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞரே நேற்று மாலை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞2

## தமிழரைக் கைவிடமாட்டார் கோட்டா!
### சம்பந்தனுக்குப் பீரிஸ் பதில்



சிங்கள - பௌத்த மக்களின் அமோக வாக்குகளால் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் அவர் தமிழ் மக்களைக் கைவிடமாட்டார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாகவுள்ளார்.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ☞2

## ஏமாறத் தயாரில்லை!
### கோட்டாவுடனான பேச்சுக்கு முன் சம்பந்தன் அதிரடி அறிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் அர்த்தபுஷ்டியான பேச்சுக்கு நாம் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

பேச்சு என்ற பெயரில் ☞2

# உடனடிப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுக்கு இணக்கம்

### ஜனாதிபதி - கூட்டமைப்பு பேச்சில் முடிவு
### அரசியல் தீர்வு அடுத்த கட்டத்தில் ஆராய்வு





கொழும்பு,மார்ச்25

தமிழ்தேசியகூட்டமைப்புக்கும் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கும் இடையில் நேரடி சமரசப் பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகி மூன்று மணி நேரம் நடைபெற்றன.

தமிழ் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய நான்கு உடனடிப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணவும் அதன் பின்னர் அடுத்து அரசியல் தீர்வு குறித்து அடுத்த கட்டத்தில் ஆராயவும் இன்று நடைபெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டதாகவும் தெரிய வருகிறது. ☞2

## புலிகளின் இலக்கை அடைய தமிழ்க் கூட்டமைப்பு முயற்சி!
### கம்மன்பில குற்றச்சாட்டு



பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளால் துப்பாக்கி மூலம் பெறமுடியாமல் போனதை, அரசியல் ஆயுதம் மூலம் பெறுவதற்கு ☞2

## அடுத்த வாரம் தொடக்கம் 10 மணிநேர மின் வெட்டு?

நாட்டில் மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்படும் காலப் பகுதியை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது ☞2

## பட்டினிச் சாவு ஏற்படாது!
### அமைச்சர் மஹிந்தானந்த உறுதி



நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது. பட்டினிச் சாவை மக்கள் எதிர்கொள்ளமாட்டார்கள். ☞2

## மக்களின் அமோக ஆணையுடன் புதிய ஆட்சியமைத்தே தீருவோம்!
### சஜித் திட்டவட்டம்



நாட்டு மக்களின் அமோக ஆணையுடன் புதிய ஆட்சியமைத்தே தீருவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டு மக்கள் சரியான நேரத்தில் உரிய முடிவை ☞2

## யாழ் கலாசார மண்டபத்தை 28 ஆம் திகதி திறக்க முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச்25

யாழ்ப்பாணத்தில் இந்திய உதவித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கலாசார மண்ட ☞2

## தமிழர் மனதை வெல்லவே கோட்டாவின் பேச்சு நாடகம்
### ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



சிங்கள மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டு வரும் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ, தமிழ் மக்களின் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மக்களின் அமோக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுப்பார்கள். நாட்டை மீட்பதற்கான ஆணையை எங்களுக்கு வழங்குவார்கள். எனவே, ஆட்சி மாற்றம் என்பது பகல் கனவு கிடையாது.

நாட்டில் இன்று உணவுப் பாதுகாப்பு இல்லை. வாழ்வதற்காகப் போராட வேண்டிய நிலைமையே உள்ளது.

ஜனாதிபதியின் சர்வகட்சி மாநாட்டின் பின்னணியில் சூழ்ச்சி உள்ளது. இதை விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஏற்றுக்கொண்டுள்ளார் - என்றார்.

## தமிழுரைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திறந்த மனதுடன் பேச்சை நடத்த வேண்டும். சந்தேகப் பார்வையில் அவர்கள் செயற்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஆக்கபூர்வமான பேச்சை நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி தீர்த்து வைப்பார் எனவும் அவர் உறுதியளித்தார்.

'ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் அர்த்தபுஷ்டியான பேச்சுக்கு நாம் தயார்; ஏமாறத் தயாரில்லை' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்த கருத்துக்கு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பதில் வழங்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

## ஏமாறத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் ஏமாறத் தயாரில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெற்றது. இந்தப் பேச்சுக்கு முன் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற விடயத்தில் நாம் உறுதியாகவுள்ளோம். அதன்பிரகாரம் ஆக்கபூர்வமான பேச்சை ஜனாதிபதி முன்னெடுத்தால் அதற்கு முழு ஒத்துழைப்பை நாம் வழங்குவோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சைக்கிள் திருடிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக சந்தேகத்துக்கிடமான முறையில் சைக்கிள் ஒன்றை குறித்த இளைஞர் எடுத்துச் சென்றபோது, அப்பகுதியில் கடமையில் இருந்த யாழ். பொலிசார் இளைஞரை மறித்து விசாரணைகளை முன்னெடுத்தபோது, சைக்கிளை இளைஞர் திருடிச் செல்வதை அறிந்து அவரைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

அதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளைப் பார்வையிட சைக்கிள்களில் வருவோர், வைத்தியசாலை சூழலில் தமது சைக்கிள்களை நிறுத்திவிட்டுச் செல்லும்போது அவை களவாடப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அது தொடர்பில் பல முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் பொலிஸார் வைத்தியசாலை சூழலில் தமது கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

புதிய சைக்கிள் ஒன்றின் விலை தற்போது 35 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் மனதை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனதை வெல்லவும் சர்வதேச சமூகத்தைச் சமாளிக்கவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நாடகத்தை அரங்கேற்றுகின்றார்.

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கோட்டாபயவின் இந்த நாடகத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் துணைபோகக்கூடாது. அவர்கள் கடந்தகாலச் சம்பவங்களை நினைவில் வைத்துக்கொண்டு நிதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது. பேச்சை மேசையைக் கூட்டமைப்பினர் சரிவரப் பயன்படுத்த வேண்டும். அதைவிடுத்துக் கோட்டா பய அரசைக் காப்பாற்றும் வகையில் அவர்கள் செயற்படக்கூடாது எனவும் சஜித் அணி வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்பதில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாகவுள்ளது. ஆனால், தமிழர்களுக்குத் தீர்வை வழங்க இந்தக் கோட்டாபய அரசு ஒருபோதும் முன்வரமாட்டாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தி மேலும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

## பட்டினிச் சாவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது, மக்களுக்கு பிரச்சினை உள்ளது என்பதை நாம் ஏற்கின்றோம். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற விடயத்தை ஏற்க முடியாது. உரிய விளைச்சல் கிடைக்கின்றது. எனவே, அரிசி மற்றும் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது. எனினும், நாட்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட வேண்டும் என்பதையே எதிரணி விரும்புகின்றது. அதற்கு நாம் இடமளிக்க வேண்டும். இப்பிரச்சினைகள் விரைவில் தீரும் - என்றார்.

## புலிகளின் இலக்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது.

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

மகாநாயக்க தேரர்களை நேற்று சந்தித்து ஆசிபெற்ற வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றதில் உள்நோக்கம் இருக்கின்றது.

தற்போதைய நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி தமது இலக்கை அடைவதற்குக் கூட்டமைப்பினர் முற்படுகின்றனர்.

அதாவது புலிகளால் துப்பாக்கி மூலம் பெறமுடியாமல் போனதை, அரசியல் ஆயுதம் மூலம் பெறக் கூட்டமைப்பினர் முற்படுகின்றனர்.

அனுமான் இலங்கையைத் தீயிட்டு அழித்தார் எனக் கூறப்படுகின்றது.

அதுபோலவே அசிங்கமான அமெரிக்கரும் தற்போது நாட்டை அழித்து வருகின்றார். அரசுக்கான பெரும்பான்மையை இல்லாது செய்தால் அவர் அமெரிக்கா ஓடிவிடுவார் - என்றார்.

## யாழ்.கலாசார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக் கட்டடத் தொகுதியை வரும் 28 ஆம் திகதி திறப்பதற்கு ஏற்ற ஒழுங்கை மேற்கொள்ளுமாறு யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் மாநகர சபையைக் கோரியுள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசினால் 100 கோடி ரூபா (இந்தியப் பணத்தில்) செலவில் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டது.

இதேநேரம் இந்த மண்டபத்தைத் திறக்க இந்தியப் பிரதமர் அல்லது இந்திய வெளிவிவகார அமைச்சர் யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலைமையில் தற்போது இருவருமே யாழ்ப்பாணத்திற்கு வருகை தராது வீடியோ காணொலி மூலம் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

## அடுத்த வாரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சிங்கள ஊடகமொன்று உள்ளகத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் தற்போது 6 மணித்தியாலத்துக்கும் அதிகமான காலப்பகுதிக்கு மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், குறித்த காலப்பகுதியை 10 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனச் சிங்கள ஊடகமொன்று உள்ளகத் தகவல்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி குறித்த நடவடிக்கை அடுத்த வாரம் முதல் அமுல்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர்மின் உற்பத்திக்கான பற்றாக்குறை ஆகிய காரணங்களால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடனடிப் பிரச்சினைகளுக்கு ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழ் அரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) ஆகிய கட்சிகளுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குமிடையில் இன்று காலை கலந்துரையாடல் நடைபெற்றது.

ரெலோ இந்த கூட்டத்தை புறக்கணித்திருந்தது.

ஜனாதிபதி செயலகத்தில் முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை இந்தச் சந்திப்பு நடந்தது.

ஜனாதிபதி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் சமல் ராஜபக்ஷ, ஜீ.எல். பீரிஸ், அலி சப்ரி ஆகியோர் அரச தரப்பில் பேச்சில் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், இராசமாணிக்கம் சாணக்கியன், தவராசா கலையரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், தமிழர்களின் இனப்பிரச்சினை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அரசுகள் மாறி மாறி ஏமாற்றி வரும் வரலாற்றைத் தெரிவித்தார்.

### அரசியல் தீர்வு

இரு தரப்பு கருத்து பகிர்வின் பின்னர், அரசியல் தீர்வு குறித்து முதலில் பேசப்பட்டது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக ஜனாதிபதி நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கை கிடைத்துள்ளது. அது இப்போது மொழிபெயர்ப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது வந்ததும் அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு குறித்து பேச்சு நடத்தலாம் என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கருத்து வெளியிட்டார்.

அந்த மொழிபெயர்ப்புடன் அந்த யோசனை வெளிவருவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று சம்பந்தன் கேட்டார். இரண்டு மாதங்கள் என்று பதில் அளிக்கப்பட்டது.

அப்படியானால், அரசியல் தீர்வு விடயத்தை இரண்டு மாதம் கழித்துப் பேசலாம். அதற்கு முன்னர் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் பற்றி பேசுவோம். அவற்றிற்கு தீர்வு கண்ட பின்னர் அதில் இருந்து அரசியல் தீர்வு பற்றி பேசலாம் என்று இரண்டு தரப்பினரும் இணக்கம் கண்டனர்.

அரசியல் பிரச்சினைகள் பற்றிய பேச்சுகள் ஆரம்பமாக முன்னர் உடனடியாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை முன் வைத்தால் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன் என்று ஜனாதிபதியும் குறிப்பிட்டார். அந்த அடிப்படையில் நான்கு விடயங்கள் குறித்துப் பேசப்பட்டன.

### கைதிகள் பிரச்சினை

தமிழ் அரசியல் கைதிகளின் விவரத்தை கூட்டமைப்புத் தூதுக்குழு சுட்டிக்காட்டியது. கூட்டமைப்பினரிடம் நேற்று அரசியல் கைதிகள் விவரம் உறவினர்களால் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த விவரத்தின் அடிப்படையில் 48 அரசியல் கைதிகள் 10 வருடங்களிற்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும், இன்னும் பலர் வழக்கு தொடரப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் சுட்டிக்காட்டப்பட்டது.

நீண்டகாலமாக பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரியையும் சுமந்திரனையும் - ஒவ்வொரு கைதியின் விடயத்தையும் தனித்தனியாக ஆராய்ந்து, புதிய பரிந்துரையைக் கூட்டாகத் தமக்குச் சமர்ப்பிக்கும் படி கூறினார் ஜனாதிபதி. அந்தப் பரிந்துரைப்படி தாம் நடவடிக்கை எடுப்பேன் என்றார் அவர். வழக்கு இருப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது, ஏனையோரை விரைந்து உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

அண்மையில் கைது செய்யப்பட்டவர்கள் கூட - குற்றச்சாட்டப்படாதோரை தாங்கள் விடுவித்துக் கொண்டிருக்கின்றனர் என்றார் அமைச்சர் சப்ரி. நாங்கள் தொடர்ந்து அதைச் செய்வோம். அடுத்த கூட்டத்திற்கு முன்னர் அந்த கைதிகளின் விடுதலையில் காத்திரமான முன்னேற்றம் இருக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

### நில அபகரிப்பு

அடுத்து நில அபகரிப்பு சம்பந்தப்பட்ட விடயம் கூறப்பட்டது.

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பு தொடர்பில் கூட்டமைப்பினர் விலாவாரியாக எடுத்துரைத்தனர். இராணுவம் ஒரு பக்கமாகவும், தொல்லியல் திணைக்களம் ஒரு பக்கமாகவும், வனவள திணைக்களம் ஒரு பக்கமாகவும் காணி அபகரிப்பு செய்கிறார்கள், வயல் நிலங்கள், வணக்க தலங்கள், குடியிருப்புக்கள் என பல இடங்களை மக்கள் நுழையத் தடைவிதிப்பதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில், ஜனாதிபதியும், பிரதமரும், இப்படியான விடயத்தைத் தாம் அறிந்திருக்கவில்லை என்ற பாணியில் கருத்துத் தெரிவித்தனர்.

'இராணுவத்தினர் காணி சுவீகரிக்கிறார்களா? அவர்களிற்கு எதற்குக் காணி?' என ஜனாதிபதி ஆச்சரியமாக கேள்வியெழுப்பினார்.

வயல் நிலங்களை சுவீகரிப்பது, மக்கள் நுழைய தடைவிதிப்பதெல்லாம் ஏற்க முடியாத நடைமுறைகள் என ஜனாதிபதியும், பிரதமரும் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் சகல விதமான காணி சுவீகரிப்பையும் நிறுத்த உத்தரவிடுமாறும், இது விடயமாக கூட்டமைப்புடன் கலந்துரையாடல் நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென கூட்டமைப்பு கோரியது. உடனடியாக, அதற்கான நடவடிக்கையை எடுப்பேன் என ஜனாதிபதி தெரிவித்தார். (7ஆம்பக்கம் பார்க்க...)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேச்சு - நல்ல ஆரம்பம்

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகின.

தொடர்ந்து பேச்சுகளை முன்னெடுக்கவும், பேச்சுக்கு உகந்த இணக்க சூழலை பேணுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தவும் அரசு தரப்பில் கோடி காட்டப்பட்டதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கோட்டாபய அரசின் இந்த வாக்குறுதிகளை நம்பலாமா, அதில் நம்பிக்கை வைத்து அர்த்தபூர்வமான ஊடாட்டங்களில் இறங்கலாமா என்பதை இனித்தான் விரிவாக ஆராய்ந்து தீர்மானிக்கப்பட வேண்டும்.

சரியோ, பிழையோ தமிழர் தரப்பின் நியாயபூர்வமான சிரத்தைகளை – முறைப்பாடுகளை – ஆதங்கங்களை – ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் நேரில் தமிழர்கள் கொட்டித் தீர்க்க இந்த சந்திப்பு வாய்ப்புத் தந்திருக்கின்றது என்பது ஒரு முன்னேற்றம்தான்.

அரசியல் கைதிகள் விடுதலை, வடக்கு கிழக்கு காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துதல், காணாமலாக் கப்பட்டோர் பிரச்சினை, வடக்கு – கிழக்கு அபிவிருத்தி நிதியம் போன்றவற்றை ஒட்டி உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இன்றைய சந்திப்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழர் தரப்புக்கு உறுதி கூறினார் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அது உண்மையானால் – அத்தகைய நடவடிக்கைகள் ஜனாதிபதி தரப்பினால் எடுக்கப்படுமானால் – இந்தப் பேச்சு முயற்சியை நல்லதொரு ஆரம்பம் என்று கருத முடியும்.

அத்தகைய நடவடிக்கைகளை நல்லெண்ண சமிக்ஞையாக வைத்துத்தான் பேச்சு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி, அதனை முன்நிபந்தனை போன்ற ஒரு காரணமாகக் காட்டித்தான் இந்த பேச்சுகளில் பங்குபற்றுவதை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ தவிர்த்து இருந்தது.

அந்த விடயங்களை ஒட்டி ஜனாதிபதி கோட்டாபயவும் அவரது அரசுத் தரப்பினரும் இப்போது வழங்கியுள்ளவை என்று கூறப்பட்ட உறுதிமொழிகள், ஆரம்பத்திலேயே நல்லெண்ண சமிக்ஞைகளாக முன்னெடுக்கப்படுமானால் கூட்டமைப்பின் இந்த பேச்சுக்களில் ரெலோவும் இனி கலந்து கொள்ளும் என்று நம்பலாம்.

தமிழர் தாயகத்தில் காணி சுவீகரிப்பு போன்ற விடயங்கள் நடைபெறுகின்றனவா, தெரியாதே என்ற பாணியில் ஜனாதிபதியும் பிரதமரும் இந்த பேச்சுக்களில் சமிக்ஞை காட்டி இருக்கின்றமை நம்பக்கூடிய விடயமா என்ற கேள்வி எழுகின்றது.

இது, 'பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகின்ற போக்கை ஒத்த நடிப்பு' என்றுதான் பலரும் கருதக் கூடும்.

இப்படி ஜனாதிபதியும் பிரதமரும் இப்போது கூறுவார்களேயானால் அது இதுவரை காலமும் அரசுடனும், ஜனாதிபதி, பிரதமருடனும் கைகோர்த்துச் செயற்பட்ட தமிழ்க் கட்சிகள், குழுக்களின் தவறு என்றுதான் கருதப்பட வேண்டும். அரசுடன் இருந்தவர்கள் அரசுக்கு தமிழரின் இந்த பிரச்சினைகளை இதுவரை சுட்டிக்காட்டவில்லை என்பதுதான் இதன் அர்த்தம். மக்களின் இந்த கஷ்டங்களை கூட ஆட்சிப் பீடத்தின் தலைமைக்கு சுட்டிக்காட்ட முடியாத தமிழ் தரப்புகள் அரசுடன் சேர்ந்து இருந்து என்ன, விட்டிருந்து என்ன என்பதுதான் பெரும் கேள்வியாகும்.

எது எப்படியோ அரசுத் தலைமையுடன் தமிழர் தரப்பு தீர்க்கமாக நேரடி பேச்சு ஒன்றைத் தொடர்வதற்கான சூழல் கருக்கட்டி இருக்கின்றது. அதை இலகுவில் முறிந்து போக விடாது பார்த்து, தந்ரோபாயமாக முன்னெடுத்துச் சென்று, இறுதி இலக்கு எட்ட தமிழ்த் தரப்பு புத்திசாலித்தனத்துடனும் சாணக்கியத்துடனும் செயல்பட வேண்டும்.

# எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு மக்களிடையே எதிர்ப்பு இல்லை!

## என்கிறது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் பொதுமக்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் இரண்டு நாள்களில் மக்களின் எரிபொருள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாடு இன்னும் இரண்டு நாள்களில் நீங்கும் என்றும், மக்கள் கேன்களுக்குள் எரிபொருளை சேர்ப்பதே தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட்டுக்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தெஹிவளையில் எரிவாயுவை பெற்றுக்கொள்ள காத்திருந்த முதியவர் வைத்தியசாலையில்!

தெஹிவளையில் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருந்த முதியவர் ஒருவர் மயங்கி வீழ்ந்துள்ளார்.

அந்த முதியவரை பொலிஸார், கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

நேற்று(வியாழக்கிழமை) காலை முதல் தெஹிவளை காலி வீதி, வைத்தியசாலைக்கு அருகிலுள்ள எரிவாயு விற்பனை நிலையத்தில் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள வந்த மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்தனர்.

வரிசையில் காத்திருந்த முதியவரே இவ்வாறு மயங்கி விழுந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.




# சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் பேச்சாளராக பங்கேற்ற முதல் இலங்கையர் சாணக்கியன்!

## வரலாற்றில் இடம்பிடிப்பு

சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் காலநிலை மாற்றம் தொடர்பாக மாநாட்டில் பேச்சாளராகப் பங்கேற்ற முதல் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பெற்றுள்ளார்.

இந்தோனேஷியாவின் பாலியில் சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் 144 ஆவது அமர்வு இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையில் மேற்படி அமர்வில் காலநிலை மாற்றம் தொடர்பில் நேற்று (வியாழக்கிழமை) மாநாடு ஒன்று நடைபெற்றிருந்தது.

சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தில் 178 நாடுகள் உறுப்பு நாடுகள் உள்ள நிலையில், பிரித்தானியா, ஒஸ்ரியா, இந்தோனேஷியா மற்றும் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோர் பேச்சாளர்களாகக் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இலங்கையில் சுற்றுச்சூழலை அரசாங்கமே அழிக்கின்றது.

அப்படியான நேரத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கிளஸ்கோ மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் இலங்கையில் 100 சதவீதம் நடைமுறையில் இல்லை. அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை சர்வதேச நாடுகள் கண்காணிக்க வேண்டும்.

– எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சாதாரணதரப் பரீட்சையில் மாற்றமில்லை திட்டமிட்டபடி நடைபெறுமென அறிவிப்பு

கடந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தர பரீட்சைகள் திட்டமிட்டபடி மே மாதம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் கல்வி ஆண்டுக்கான பாடப் புத்தகங்களில் 3.8 கோடிக்கும் அதிகமானவை அச்சிடப்பட்டு பிரதான களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளமையுடன் பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டுக்கான முதலாம் தவணை ஆரம்பமாகும்போது முழுமையாக பாடப் புத்தகங்கள் வழங்கும் பணிகள் நிறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டெங்குத் தாக்கம் நாட்டில் அதிகரிப்பு!

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் புதிதாக 733 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.


நாடளாவிய ரீதியில் 47 சுகாதார வலயங்களின் வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாயகரமான பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 12 ஆயிரத்து 34 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# போரை மே 9 ஆம் திகதிக்குள் முடிக்க ரஷ்யா திட்டம் என்கிறது உக்ரைன்



உக்ரைன் மீதான போரை மே 9 ஆம் திகதிக்குள் முடிவுக்கு கொண்டுவர ரஷ்யா விரும்புவதாக உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் ஒரு மாதத்தை கடந்தது. இன்று 30ஆவது நாளாக தாக்குதல் நீடித்து வருகிறது.

தலைநகர் கீவ், கார்கிவ், மரியுபோல் உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் ரஷ்ய படைகள் தங்களது தாக்குதலை இடைவிடாமல் நடத்தி வருகின்றன.

உக்ரைன் நாட்டை மூன்று முனைகளில் ரஷ்ய படைகள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்துகின்றன. உக்ரைனின் சில நகரங்களை ரஷ்யா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன.

ஆனால் கீவ், கார்கிவ் உள்ளிட்ட பெரிய நகரங்களை ரஷ்யா இன்னும் கைப்பற்றவில்லை. ரஷ்ய படைகளுக்கு எதிராக உக்ரைன் ராணுவத்தினர் கடும் சவால் அளித்து வருகிறார்கள். கீவ் புறநகரில் ரஷ்யா கைப்பற்றிய ஒரு பகுதியை உக்ரைன் ராணுவம் மீட்டது. இதனால் ரஷ்ய ராணுவம் தங்களது தாக்குதலை கடுமையாக்கி உள்ளது.

இந்த நிலையில் உக்ரைன் மீதான போரை மே 9ஆம் திகதிக்குள் முடிவுக்கு கொண்டு வர ரஷ்யா விரும்புவதாக உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து உக்ரைன் ஆயுத படைகளின் பொதுப் பணியாளர்களின் உளவுத் துறை கூறும்போது, மே 9 ஆம் திகதிக்குள் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று ரஷ்ய துருப்புகளிடம் கூறப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது. மே 9 ஆம் திகதி ரஷ்யாவில் ஜேர்மனியின் நாஜி படையை வென்ற நாளாக கொண்டாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே உக்ரைன் மக்கள் வலுக்கட்டாயமாக ரஷ்யாவுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர் என உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உக்ரைன் தரப்பில் கூறும்போது, ஆயிரக்கணக்கான உக்ரைன் மக்கள் வலுக்கட்டாயமாக ரஷ்யாவுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் பணயக் கைதிகளாக பயன்படுத்தப்படலாம்.

இதன்மூலம் சரண் அடையுமாறு உக்ரைன் மீது அழுத்தம் கொடுக்கலாம். 84 ஆயிரம் குழந்தைகள் உள்பட 4 லட்சம் பேர் தங்கள் விருப்பத்திற்கு மாறாக ரஷ்யாவுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்சல்சில் நடந்த நேட்டோ உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோபைடன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

நேட்டோ அமைப்பு இதுவரை இவ்வளவு ஒற்றுமையாக இருந்ததில்லை. இது ரஷ்ய அதிபர் புடினின் எதிர்பார்ப்பை பொய்யாக்கி உள்ளது.

உக்ரைனில் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்தினால் நேட்டோ படைகள் பதிலடி கொடுக்கும். பதிலடியின் தன்மை பயன்பாட்டின் தன்மையை பொறுத்து இருக்கும் என்றார். நேட்டோ உச்சி மாநாட்டில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, காணொலி மூலம் பேசும்போது, உக்ரைனுக்கு ஆதரவு அளித்ததற்கும், ரஷ்யா மீது பொருளாதார தடைகளை விதிப்பதற்கும் இணைந்து பணியாற்றிய ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். ஆனால் இந்த நடவடிக்கைகள் முன்னதாக எடுக்கப்படவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தில் சேருவதற்காக உக்ரைனின் விண்ணப்பத்தை விரைவாக பரிசீலிக்க வேண்டும். இதில் தாமதிக்க வேண்டாம். எங்களுக்கு இது ஒரு வாய்ப்பு என்றார்.

## பாகிஸ்தானில் திடீர் தேர்தல் வரலாம் உள்துறை மந்திரியின் பேட்டியால் பரபரப்பு



பாகிஸ்தானில் இம்ரான் கான் அரசு மீது 28ஆம் திகதி வாக்கெடுப்பு வர உள்ள நிலையில், அங்கு திடீர் தேர்தல் வரலாம் என அந்த நாட்டின் உள்துறை மந்திரி கூறி இருக்கின்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானில் இம்ரான் கான் அரசுக்கு எதிராக பாகிஸ்தான் மக்கள் கட்சி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ் ஷெரீப்), அவாமி தேசிய கட்சி, ஜாமியத் உல்மா இ இஸ்லாம் கட்சி (மவுலானா பஸ்லுர் ரகுமான் அணி) ஆகிய எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன. அவை இம்ரான்கான் அரசு மீது அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு நோட்டீஸ் அளித்துள்ளன.

இம்ரான்கான் அரசை கவிழ்த்து விடுவதில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு நிற்கின்றன.

நம்பிக்கையில்லா பிரேரணை மீது 28ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இது இம்ரான்கான் அரசுக்கு அக்னி பரீட்சையாக அமைந்துள்ளது. இதற்கு ஒரு நாள் முன்னதாக 27ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் மாபெரும் பொதுக் கூட்டத்தை இம்ரான்கான் நடத்த உள்ளார்.

இந்த நிலையில் இம்ரான்கான் ஒரு வீடியோ செய்தியை வெளியிட்டுள்ளார். அதில் அவர், நன்மைக்கு ஆதரவாகவும், தீமைக்கு எதிராகவும் முஸ்லிம்கள் நிற்க வேண்டும் என்று அவர் குரானை மேற்கோள்காட்டி கூறி உள்ளார்.

மேலும், 27ஆம் திகதி நடக்க உள்ள கூட்டத்துக்கு அவர் அழைப்பும் விடுத்திருக்கிறார். இதுதொடர்பாக அவர் குறிப்பிடும்போது, நான் தீயவர்களுடன் இல்லை. அதற்கு எதிராக இருக்கிறோம் என்ற செய்தியை விடுப்பதற்கு 27ஆம் திகதி திகதியன்று மக்கள் என்னுடன் சேர வேண்டும். கொள்ளையடித்த பணத்தில் மக்கள் பிரதிநிதிகள் வாங்கப்படுகிறார்கள். பாகிஸ்தானையும், ஜனநாயகத்தையும் சேதப்படுத்தும் முயற்சியில் இனி மேல் யாரும் குதிரை பேரத்தில் ஈடுபட முடியாது என்பதை நாடு அறிய வேண்டும் என்று கூறி உள்ளார்.

இதற்கு மத்தியில் பாகிஸ்தான் உள்துறை மந்திரி ஷேக் ரசீத் அகமது, இஸ்லாமாபாத்தில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-


ஆளும் கட்சி எம்.பிக்கள் கட்சி தாவ வேண்டியதில்லை. அது அவர்களுக்கு எந்த நன்மையையும் செய்யாது. நாட்டில் முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படலாம் என்பதை கட்சிமாறிகள் நினைவில் கொள்ள வேண்டும்.

கட்சி மாறினால் மரியாதை கிடைக்கும் என்று நினைப்பவர்கள் தவறு செய்கிறார்கள். இந்த கட்டத்தில் நாட்டுக்கு நல்ல செய்தி கிடைக்கும்.

கூட்டாளிகள் பொதுவாக முடிவுகளை எடுப்பதில் அதிக நேரம் எடுத்துக் கொள்கின்றனர். உண்மையுள்ளவர்கள் ஜனநாயகம் மற்றும் அவர்களுடைய கட்சியுடன் அப்படியே இருக்கிறார்கள்.

இது அவர்களின் தார்மீக, அரசியலமைப்பு மற்றும் இஸ்லாமிய பொறுப்பு என்பதால் எதிர்க்கட்சி முகாமில் உள்ள அரசியல்வாதிகள் தங்கள் முடிவில் உறுதியாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். நம்பிக்கையில்லா பிரேரணை மீது வாக்கெடுப்பு நடக்க உள்ள நிலையில் பாகிஸ்தானில் திடீர் தேர்தல் வரலாம் என்று பாகிஸ்தான் உள்துறை மந்திரி ஷேக் ரசீத் அகமது கூறி இருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## எரிவாயு விற்பனைக்கு ரூபிள் மட்டுமே ஏற்கப்படும் என்கிறார் அதிபர் புடின்



நட்பற்ற நாடுகளுக்கு எரிவாயு விநியோகம் செய்ய ரூபிள் மட்டுமே ஏற்கப்படும் என ரஷ்யா அதிபர் விளாடிமிர் புடின் அதிரடியாக அறிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், மேற்கு நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தன.

இதற்கிடையே, ரஷ்யா நட்பற்ற நாடுகளின் பட்டியலை அறிவித்தது. இந்தப் பட்டியலில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள், பிரிட்டன், ஜப்பான், கனடா, நோர்வே, சிங்கப்பூர், தென்கொரியா, சுவிட்ஸர்லாந்து மற்றும் உக்ரைன் ஆகியவை அடங்கும்.

ரஷ்ய எரிவாயு மீதான தடைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், பல ஐரோப்பிய நாடுகள் மாஸ்கோவிலிருந்து உக்ரைன் வழியாக எண்ணெய் இறக்குமதி செய்து வருகின்றன.

இந்நிலையில், எரிவாயு விற்பனைக்கு ரூபிள் மட்டுமே ஏற்கப்படும் என்ற அதிபர் புடினின் அறிவிப்பு, ஐரோப்பாவை கடுமையாக பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நட்பற்ற நாடுகளுக்கு எங்கள் எரிவாயு விநியோகத்திற்கான கட்டணத்தை ரஷ்ய ரூபிள்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளைச் செயல்படுத்த நான் முடிவு செய்துள்ளேன். இந்த மாற்றங்களை ஒரு வாரத்திற்குள் செயல்படுத்த உத்தரவிட்டுள்ளேன் என தெரிவித்தார்.

அரசாங்கமும் மத்திய வங்கியும் இந்த நடவடிக்கைகளை ரஷ்ய நாணயத்திற்கு எவ்வாறு நகர்த்துவது என்பது குறித்த ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கு ஒரு வாரம் அவகாசம் இருப்பதாகவும், எரிவாயு ஒப்பந்தங்களில் தொடர்புடைய மாற்றங்களைச் செய்ய உத்தரவிடப்படும் என அவர் கூறியுள்ளார்.

## ரஷ்யாவுக்கு உதவினால் சீனா கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என ஜோ பைடன் எச்சரிக்கை

*ஜி-7 மாநாட்டிற்கு பிறகு பேசிய அதிபர் ஜோ பைடன், ஜி-20 அமைப்பில் இருந்து ரஷ்யா வெளியேற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.*

*பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸ் நகரில் ஜி-7 நாடுகளின் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் மற்றும் கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.*

*இதைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:*

*உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு உதவினால் சீனா கடும் பொருளாதார விளைவுகளை சந்திக்க நேரிடும். ரஷ்யா-விற்கு சீனா உதவி வழங்கும் சாத்தியம் குறித்து, கடந்த வாரம் சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் நேரடியான உரையாடல் நடத்தினேன்.*

*ரஷ்யாவுடன் இருப்பதை விட அதன் பொருளாதார எதிர்காலம் மேற்கத்திய நாடுகளுடன் மிக நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது என்பதை சீனா புரிந்து கொண்டுள்ளதாக நினைக்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.*

# மக்கள் மற்றும் கொரோனா நோயாளிகள் மீது பிரதமருக்கு அக்கறை இல்லை என்கிறார் ராகுல்



இந்தியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவு காரணமாக தற்கொலைகள் அதிகரித்துள்ள என காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்திய மத்திய பா.ஜ.க. அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் கொரோனா நோயாளிகள் இலவச சிகிச்சை பெறவில்லை என்ற செய்தியை மேற்கோள் காட்டியுள்ள ராகுல் காந்தி, தனது டுவிட்டர் பக்கத்தில் மத்திய அரசை கடுமையாகச் சாடியுள்ளார். மக்கள்,தொழிலாளர்கள் மற்றும் கொரோனா நோயாளிகள் மீது பிரதமர் நரேந்திர மோடிக்கு அக்கறை இல்லை. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டதா? - இல்லை. ஏழைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச வருமானம் கிடைத்ததா? - இல்லை. சிறு தொழில்கள் பாதிப்படையாமல் காப்பாற்றப்பட்டனவா? - இல்லை. பிரதமர் எதற்கும் கவலைப் படவில்லை. வேலை மற்றும் வருமானத்தை இழந்த இந்தியர்களிடையே அதிகளவில் தற்கொலைகள் நடைபெறுகின்றன. மிகைப்படுத்தப்பட்ட உடல்நலக் காப்பீட்டுத் திட்டம் மருத்துவமனைக் கட்டணங்களைச் செலுத்தத் தவறிவிட்டது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கொரோனா நோயாளிகளில் 12 சதவீதத்திற்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது, என்று தனது பதிவில் ராகுல் காந்தி குறிப்பிட்டிருக்கிறார்.

## தமிழகத்துக்கு வருகை தரும் ஈழத்தமிழர்களுக்கு விரைவில் விடிவு காலமென ஸ்டாலின் நம்பிக்கை



நேற்று மாலை டுபாய் புறப்படுவதற்கு முன்னர் தமிழக சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றியிருந்தார்.

இன்று நிதி அமைச்சரும், வேளாண்மை துறை அமைச்சரும் பதில் உரை வழங்கி மிகச் சிறப்பான முறையில் பேசி அமர்ந்துள்ளனர். அவர்களைப் பாராட்டுகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் பல்வேறு துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாகியுள்ளனர்.

இந்த சூழலில் அங்கு பரிதவித்துக்கொண்டிருக்கிற இலங்கைத் தமிழர்கள் அண்மையில் தமிழகத்துக்கு வரும் செய்தியை நானும் பார்த்துள்ளேன்.

இது குறித்து நேற்று அதிகாரிகளை அழைத்துப் பேசினேன். மத்திய அரசிடம் அமைச்சர்கள், அதிகாரிகள் தொடர்பு கொண்டு இதனை எப்படிக் கையாள வேண்டும் என்று சட்டரீதியாக பேசிக் கொண்டு இருக்கிறோம். விரைவில் இதற்கு ஒரு விடிவு காலத்தை தமிழக அரசு ஏற்படுத்தித் தரும், என்று மு.க.ஸ்டாலின் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## நளினியின் மனுவை விசாரணைக்கு பட்டியலிட பதிவுத்துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு



ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அமைச்சரவை 2018 ஆம் ஆண்டில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பியது. ஆனால், இந்த தீர்மானம் மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்காமல் உள்ளார்.

ஆளுநர் முடிவு எடுக்காத நிலையில், தன்னை முன்கூட்டியே விடுதலை செய்யக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி மனுத் தாக்கல் செய்திருந்தார். ஆளுநரின் ஒப்புதலுக்கு காத்திராமல் தமிழக அமைச்சரவை முடிவின் அடிப்படையில் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என அவர் தனது மனுவில் கூறியுள்ளார்.

இந்த மனு தொடர்பாக தலைமை நீதிபதி முனிஸ்வர்நாத் பண்டாரி, நீதிபதி வரத சக்கரவர்த்தி அடங்கிய அமர்வில் நேற்று விசாரணை நடைபெற்றது.

அப்போது, நளினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், இந்திய அரசியல் சாசனம் 161 ஆவது பிரிவின்படி தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்ப அமைச்சரவைக்கு அதிகாரம் உள்ளதாகவும், அமைச்சரவையின் பரிந்துரை ஆளுநரை கட்டுப்படுத்தும் என்றும் வாதிட்டார். இந்தப் பரிந்துரை மீது 42 மாதங்களாக எந்த ஒரு முடிவும் எடுக்கப்படாததால், தனிப்பட்ட சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நளினி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் எனவும் அவர் கூறினார். இந்த வாதங்களைக் கேட்டறிந்த நீதிபதிகள், இதுவரை பட்டியலிடப்படாத இந்த மனுவிற்கு எண்ணிட்டு விசாரணைக்கு பட்டியலிட பதிவுத்துறைக்கு உத்தரவிட்டனர்.

இதே வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக உள்ள ரவிச்சந்திரன், தன்னை முன்கூட்டியே விடுதலை செய்யக்கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கில் ரவிச்சந்திரன் தரப்பில் நேற்று ஆஜரான வழக்கறிஞர், தமிழகத்தில் 3,000 இற்கும் மேற்பட்ட ஆயுள் கைதிகள் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்ட நிலையில் ரவிச்சந்திரனையும் விடுதலை செய்யவேண்டும் என வாதிட்டார். இதையடுத்து, ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்தமை தொடர்பான அரசாணையை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை அடுத்த வாரத்திற்கு ஒத்திவைத்தனர்.

## இலங்கையிலிருந்து தமிழ்நாடு வருவோர் மீது வழக்குக்கூடாதென வன்னி அரசு கோரிக்கை



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கடல் வழியாக தமிழகம் வருவோர் மீது வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைக்கக்கூடாது, என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு கேட்டுக்கொண்டுள்ளார்.

டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், முன்பு சிங்கள இன ஒடுக்குமுறையைப் போலவே, இப்போதும் தமிழர்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் கூறியுள்ளார்.

இதனால், தமிழகம் வரும் இலங்கைத் தமிழர்களை ஏற்கனவே உள்ள முகாம்களுக்கு அனுப்பாமல் அவர்களுக்கென தனி முகாம் அமைக்க வேண்டும், என்றும் வன்னி அரசு வலியுறுத்தியுள்ளார்.

## ஓடும் பேருந்தில் பியர் குடித்துவிட்டு ரகளை மாணவிகளின் காணொலியால் அதிர்ச்சி!

திருக்கழுக்குன்றம், வல்லிபுரம் மற்றும் சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகளில் பெரும்பாலானோர் அரசு பேருந்துகளைப் பயன்படுத்திவரும் நிலையில், அரசு மேல் நிலைப்பள்ளியில் பிளஸ்-2 படிக்கும் மாணவிகள் சிலர் செங்கல்பட்டில் இருந்து தச்சூர் நோக்கி செல்லும் அரச பேருந்தில் வைத்து பியர் குடிக்கும் காணொலிக் காட்சி தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இந்த காணொலிக் காட்சி 34 வினாடிகள் கொண்டதாக இருக்கிறது. அதில் மாணவ, மாணவிகள் நின்றபடி பயணம் செய்யும் நேரத்தில் மாணவிகளில் ஒருவர் பியர் போத்தலை எடுத்துக் குடித்துவிட்டு கொடுக்க, அருகில் நின்று கொண்டிருக்கும் மற்ற மாணவிகளும் எந்த வித தயக்கமும் இன்றி ஒருவர் பின் ஒருவர் அதனை வாங்கி மாறி மாறி குடிக்கிறார்கள்.



பின்னர் போதையில் மாணவிகள் கூச்சலிட்டு பேருந்தில் ரகளையில் ஈடுபடுகின்றனர். அருகில் மாணவர்களும் நிற்கிறார்கள். மற்ற பயணிகள் அருகில் இருப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் ஓடும் பேருந்தில் மாணவிகள் பியர் குடித்து கலாட்டா செய்த சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த காணொலிக் காட்சியில் பியர் குடிக்கும் மாணவிகளின் முகம் தெளிவாக தெரிகிறது. அத்தோடு, 'வாசனை வராதில்ல?' என கேட்டபடியே மாணவிகள் ஒவ்வொருவராக குடிப்பதும் பதிவாகியுள்ளது. இந்த காட்சியை மாணவிகளில் ஒருவரே பதிவு செய்து பகிர்ந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக கல்வித்துறை மற்றும் திருக்கழுக்குன்றம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். பியர் குடித்து பேருந்தில் ரகளையில் ஈடுபட்ட மாணவிகளை தனித்தனியாக அழைத்து அறிவுரை கூறி எச்சரிக்க திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மேரி ரோஸ் மிர்மலா மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் தாமோதரன் ஆகியோரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோது, சமூக வலைத் தளத்தில் மாணவிகளின் வீடியோவை பார்த்தோம். பாடசாலையை விட்டு வெளியே சென்றவுடன் இது போன்ற சம்பவம் நடந்துள்ளது.

இதுபற்றி விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு கவுன்ஸிலிங் கொடுக்க உள்ளோம்.

விரைவில் அரசு பொதுத்தேர்வு தொடங்கவுள்ளது. இதற்காக மாணவர்களை தயார் செய்ய ஆசிரியர்கள் கடும் முயற்சி எடுத்து வரும் இந்த வேளையில் இது போன்ற செயல்கள் வருத்தம் அளிக்கிறது, என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பணிமனையும் மூதூரிலிருந்து சேருவிலவுக்கு இடமாற்றப்படுகிறது

## குறுகிய இனவாத நோக்கம் கொண்ட நடவடிக்கை எனக் கண்டனம்

(ஹஸ்பர்)

மூதூர்நீர்வழங்கல்வடிகாலமைப்பு சபையின் பிரதேச பொறியியலாளர் காரியாலயத்தை குறுகிய நோக்கத் திற்காக இடமாற்றுவதை ஏற்க முடியாது என மூதூர் பிரதேச சபை உறுப்பினர் சிஹான் சுஹூட் தெரிவித் தார். அவர் அங்கு கூறியவை வருமாறு:-



மூதூரில் இயங்கிவரும் நீர்வழங் கல் வடிகாலமைப்பு சபையின் பிரதேச பொறியியலாளர் காரியாலயம் சேருவிலப் பிரதேசத்திற்கு மாற்றப் படுவது சம்பந்தமாக தனது வாதத்தை நேற்றைய சபை அமர்வின் போது அவர் முன்வைத்தார். தொடர்ந்தும் உரையாற் றிய அவர் –

சுமார் 2016 இல் இருந்து தற்போது வரையான காலப்பகுதியில் மூதூர் தொகுதியை அதிகம் உள்ளடக்கியதாக கிண்ணியா, மூதூர், தோப்பூர், ஈச்சிலம் பற்று மற்றும் சேருவில ஆகிய பிர தேசங்களுக்கு உரித்தான நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதேச பொறியியலாளர் காரியாலயம் மூதூரில் இயங்கிவந்த நிலையில் தற்போது மூதூரில் இருந்து முற்றாக அகற்றி சேரு வில பிரதேசத்தில் மேற்படி காரியால–யத்தை அமைத்து வருகின்றமை குறுகிய நோக்கத்தைக் கொண்ட ஓர் இனவாத செயற்பாடாகவே கருதப்படு கின்றது. மேற்படி மூதூர் தொகுதியின் மையப்பகுதியான மூதூரில் இயங்கி வந்த பிரதேச பொறியியலாளர் காரியா லயத்தின் ஊடாக இங்கு வாழ்கின்ற மூவின சமூகங்களும் தங்களுக்கான நீர்வழங்கல் சேவைகளை இலகுவான முறையில் கையாளக் கூடியதாக இருந்தது. இந்த நீர்வழங்கல் சேவை யைப் பெற்றுக்கொள்ளும் அதிக பய னாளிகள் மூதூர் தொகுதியை மையப் படுத்தியே வாழ்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறு பயன்பாட்டில் உள்ள இந்தப் பிரதேச பொறியியலாளர் காரி–யாலயத்தை மூதூரிலேயே நிரந்தர மான காரியாலயமாக அமைக்க ஏற் பாடாகியிருந்தது. அதை ஒரு சில இனவாத சிந்தனை உள்ள அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகள் திட்டமிட்டு மாற்ற முயலுகின்றனர்.

சேருவில பிரதேசத்தின் பயனாளி களின் எண்ணிக்கையின் அடிப்படை யில் அங்கு இவ்வாறான நிரந்தரமான காரியாலயம் அமைக்கப்படுதல் வரவேற்கத்தக்க விடயமாகும். ஆனால் அதற்காக மூதூர் தொகுதியின் மையப் பகுதியான மூதூரில் உள்ள மேற்படி காரியாலயத்தை முற்றாக நீக்கி அதனை சேருவிலயில் நிறுவுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டிய ஒன்றாகும்.

மூவினங்கள் சமரசத்துடன் வாழும் நல்ல ஒரு சூழலை அரசியல் இலாபங் களுக்காகச் சிதைக்க இடமளிக்கக் கூடாது.

முக்கியமாக இந்த இனவாத செயற் பாடுகளை கண்டும் காணாமல் இருக் கின்ற – திருகோணமலை மாவட்டத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்று தாங்கள்தான் இந்த சமூகத்தின் தலை மைகள் என கர்ஜிக்கும் – இந்நாள் நாடா ளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள்மாகாணசபைஉறுப்பினர்கள் போன்றோர் இவ்வாறான செயற்பாடு களுக்கு பொறுப்பு கூறவேண்டும்.

இவ்வாறானசெயற்பாட்டை இதற்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அதி காரிகள் உடனடியாக நிறுத்தி, இதற்கான நிரந்தர தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். எனத் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.



## இளைஞர் சேவைகள் மாகாண காரியாலய இடமாற்றத்தை நிறுத்தப் பிரதமர் பணிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருதில் இருந்து அம்பா றைக்கு இடமாற்றம் செய்யப்பட இருந்த கிழக்கு மாகாண இளைஞர் சேவைகள் காரியாலய விவகாரம் தொடர்பில் பல்வேறு தரப்பினரினாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்தில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந் தித்து விடயத்தின் நியாயத்தன்மையை எடுத்துரைத்தனர்.

உடனடியாக இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் தமித விக்கிரமசிங் கவை தொலைபேசியில் அழைத்து விடயத்தை எடுத்துரைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இளைஞர்களின் நலன் கருதி இந்த இடமாற்றத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு பணிப்புரை விடுத்தார் எனக் கூறப் பட்டது.

இந்த சந்திப்பில் முஸ்லிம் நாடாளு மன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், இசாக் ரஹ்மான், சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், அலி சப்றி ரஹீம் ஆகியோர் கலந்து கொண் டிருந்தனர். கிழக்கு மாகாண இளைஞர் களின் சேவை நிலையமாக இருக்கும் இந்த மாகாண காரியால யத்தை இடமாற்றம் செய்வது தொடர் பில் ஆட்சேபனை தெரிவித்து கிழக்கின் கேடயம், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர், இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினர் பல்வேறு நடவடிக் கைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பன்றிக்கு வைத்த மின் இணைப்பில் தானே சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு



மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோமத்லாவெளி கிராம சேவகர் பிரிவில் பன்றிக்கு வைக்கப் பட்டிருந்த மின்சாரத்தில் சிக்குண்டு குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

கோமத்தலாவெளி கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந் தையான சந்திரசேகரன் யோகேஸ்வரன் (வயது 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

உயிரிழந்த நபர் வத்தவப் பழப் பயிர் செய்கையில் ஈடுபட்டு வருபவர்.

தன்னுடைய தோட்டத்துக்கு மின்சார சபையில் முறையாக மின்சாரம் பெறப்பட்டிருந்த நிலையில் தோட்டத் துக்குள் பன்றி மற்றும் காட்டு மிருகங்கள் வருவதினால் அவற்றில் இருந்து பயிர் களை பாதுகாப்பதற்காக முறையற்ற விதத்தில் மின்சாரத்தினை பயன் படுத்தியுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவரு கிறது.

முறையற்றவிதத்தில்மின்சாரத்துடன் கம்பி இணைக்கப்பட்டதினால் மின்சாரம் தாக்கி இவ் உயிரிழப்பு இடம்பெற்றுள் ளதாக வாகரை பொலிஸார் தெரிவி கின்றனர்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கபட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மின் தாக்கி இளைஞன் சாவு; திராய்மடுவில் சோக சம்பவம்

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திராய்மடு, ஐந்தாம் குறுக்கு வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மாலை மின்சாரம் தாக்கி, கோகிநாதன் நிதுர்ஷன் எனும் 22 வயது இளைஞன் உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு கதவு ஒன்றை பொருத்துவதற்கான பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நடைபெற்றது, மின்சாரத்தில் பொருத்தப் பட்டிருந்த துளையிடும் கருவியின் வயர் கதவில் இணைக்கப்பட்டிருந்த தகரத்தில் பட்டிருந்த நிலையில் அந்தத் தகரத்தில் துளையிடும் கருவியினால் துளை யிட முயற்சித்தபோது இளைஞன் மின்சாரத்தில்



தாக்கப்பட்டுள்ளார். உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இளைஞன் கொண்டு செல்லப்பட்டபோதிலும் அங்கு அவர் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை கொக்குவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். உயிரிழந்த இளைஞன் கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று, பொறியியல் துறைக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தான் என உறவினர்கள் தெரிவித்தனர்.

இளைஞனின் மரணம் அப்பகுதியை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# இலங்கையில் இருந்து தமிழகம் வந்தவர்களை மண்டபம் முகாமில் தங்க வைக்க தீர்மானம்?

## தயார் நிலையில் 150 வீடுகள்

இலங்கையில் இருந்து தமிழகம் வந்தவர்களை மண்டபம் முகாமில் தங்க வைக்கத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தமிழ் மக்கள், தமிழகம் நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளனர். கடந்த இரு தினங்களில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் இலங்கையில் இருந்து தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர்.

இவர்களில் இந்தியக் கடலோரக் காவல் படையால் மீட்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் 6 பேரும் விசாரணைக்குப் பின்னர் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் மரைன் பொலிஸாரால் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதில் யாழ்ப்பாணம் கஜேந்திரன், இவரது மனைவி மேரிகிளாரின், மன்னாரைச் சேர்ந்த டியோரி ஆகியோரை புழல் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும், டியோரியின் பிள்ளைகளான எஸ்தர், மோசஸ் இருவரையும் வேலூர் சிறப்பு முகாமில் உள்ள டியோரியின் பாட்டியிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த சூழலில் தமிழக அரசு, அகதிகளாக வந்தவர்களை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்க முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து சிறையில் அடைக்கும் உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அரசின் உத்தரவிற்கு பின் 16 பேரும் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது.

இதற்காக முகாமில் 150 வீடுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. உணவு வழங்க 30 சமையலாளர்கள், உதவியாளர்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர்.

# உக்ரைன் - ரஷ்யா போன்று இங்கும் மோதல் ஏற்படுமாம்!

## மல்வத்துபீட பிரதம தலைவர் ஆரூடம்

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதலைப் போன்று இலங்கையிலும் மோதல் ஏற்படக் கூடும் என்று பேசப்படுவதாக மல்வத்து பீடத்தின் பிரதம தலைவர் அதி வணக்கத்திற்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல மகா தேரர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் பங்காளிகளான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, திரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க மற்றும் ரோஹன லக்ஷ்மன்பியதாஸ உள்ளிட்டவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'அரசாங்கத்தின் சில செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை இல்லாமையே பிரச்சினையாக உள்ளது. நாட்டின் சில பகுதிகள் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு வழங்கப்படுகின்றன என பல்வேறு தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்கள் மிகுந்த அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ள இவ்வேளையில், அரசாங்கம் மற்றும் அனைத்துத் தரப்பினரும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதலைப் போன்று இலங்கையிலும் மோதல் ஏற்படக் கூடும் என்று பேசப்படுவதாகவும் அவர் கூறினார்.

# சமையல் எரிவாயுக்களை வழங்க கிளிநொச்சியில் புதிய ஏற்பாடு!

கிளிநொச்சி மாவட்டத்தில் சமையல் எரிவாயு குடும்ப பங்குகீட்டு அட்டை மூலமாகவும், உணவகங்களுக்கு கடை அனுமதிப்பத்திரம் ஊடாகவும் வழங்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் அதிகாலை 3 மணிக்கு வருகைதந்தால் மாத்திரமே சமையல் எரிவாயுவைப் பெறமுடியும் என விசனம் தெரிவிக்கின்றனர்.

இரு ஆவணங்களும் இல்லாதவர்கள் சமையல் எரிவாயுவை பெறமுடியாத நிலையும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 294.99 ரூபா!

இலங்கை மத்திய வங்கியின் நாளாந்த நாணய மாற்று வீத அட்டவணையின் அடிப்படையில் இன்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 294.99 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. அத்துடன் இன்றைய தினம்(வெள்ளிக்கிழமை) அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 284.82 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

# உடனடிப் பிரச்சினைகளுக்கு

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

இராணுவத்தையோ, கடற்படையையோ, விமானப்படையையோ இனிக் காணி சுவீகரிப்பில் ஈடுபடக் கூடாது எனத் தாம் உத்தரவிட்டிருக்கின்றேன் என்று கூறிய ஜனாதிபதி, அதை மீறி இனி எதுவும் நடக்காது என்றும் உறுதி அளித்தார்.

எனினும் அத்தகைய அபகரிப்புகள் தொடர்கின்றன என விலாவாரியாக எடுத்துரைத்தனர் கூட்டமைப்பினர். அந்த விவரங்களைத் தாருங்கள் இனிமேல் அப்படி நடக்காமல் தாம் உறுதியாகப் பார்த்துக் கொள்வேன் என்றார் ஜனாதிபதி கோட்டாபய.

எல்லை மீள் நிர்ணயம் செய்து, இனப்பரப்பலை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூட்டமைப்பினர் கேட்டுக் கொண்டதற்கு ஜனாதிபதி இணங்கினார். கூட்டமைப்பினருடன் பேசாமல் வடக்கு, கிழக்கில் அத்தகைய மாற்றங்கள் ஏதும் இனி செய்யப்பட மாட்டாது என்று ஜனாதிபதி தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி சபை, தொல்லியல் திணைக்களம் போன்றன காணிகளை கபளீகரம் செய்யும் நடவடிக்கைகளும் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும், இனிமேல் அந்தத் தரப்புகள் கூட்டமைப்புடன் கலந்து பேசாமல் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க மாட்டா என்றும், அதற்கான உத்தரவுகளை ஜனாதிபதி சம்பந்தப்பட்டோருக்கு வழங்குவார் என்றும் உறுதி கூறப்பட்டது.

வயல்களில் வேலை செய்வோர் தொல்லியல் திணைக்களத்தினால் தடுக்கப்படுகின்ற விடயம் உடனடியாக நிறுத்தப்படும். தங்களின் வாழ்வாதாரத்துக்காக நீண்ட காலம் பயிர்செய்வோரை யாரும் தடுக்க முடியாது, அதற்கான உத்தரவு உரியவர்களுக்கு வழங்கப்படும் என உறுதி கூறப்பட்டது.

### காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்

தொடர்ந்து காணாமல் போனோர் விவகாரம் ஆராயப்பட்டது. ஒரு லட்சம் ரூபா வழங்கிய மக்களை ஏமாற்றப் பார்க்கிறீர்களா என்று சம்பந்தன் சீறினார்.

வழங்குவது நஷ்ட ஈடு அல்ல, அது உடனடி இடைக்கால நிவாரணம் தான், அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் கூறப்பட்டது.

ஒவ்வொருவர் குறித்தும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கான உடனடி விசாரணைகள் தனித்தனியாக ஆரம்பிக்கப்படும். அடுத்த கூட்டத்துக்கு முன்னர் இதில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

### வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு தனியான நிதியம்

நான்காவது விடயமாக வடக்கு - கிழக்கு பொருளாதார மீட்சிக்காக ஒரு விசேட அபிவிருத்தி நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அதனைக் கூட்டமைப்புடன் சேர்ந்து அரசு முன்னெடுக்கும். அதன் மூலம் புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளை தருவிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகளை அரசாங்கம் உருவாக்கும்.

கூட்டமைப்புடனான அடுத்த கூட்டத்திற்கு முன்னர் அந்த நிதியம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அரசமைப்பு உருவாக்கத்திற்காக ஜனாதிபதி நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கை அதன் மொழிபெயர்ப்போடு இரண்டு மாதங்களுக்குள் தயாரானதும் கூட்டமைப்பு - ஜனாதிபதி அடுத்த சுற்றுப் பேச்சு அதை அடிப்படையாக வைத்துத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு முன்னர் மேற்படி நான்கு விடயங்களிலும் காத்திரமான நடவடிக்கை, கூட்டமைப்பைத் திருப்திப்படுத்தக் கூடிய விதத்தில் முன்னெடுக்கப்படும் என்ற உறுதி அரசு தரப்பில் வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# வவுனியாவில் வாள்களுடன் சென்ற இளைஞர் குழு வேப்பங்குளத்தில் தாக்குதல்; அடாவடி; அட்டகாசம்!






வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது வாள்களுடன் சென்ற இளைஞர் குழு ஒன்று தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று பகல் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, வேப்பங்குளம், 7 ஆம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் கணவன் வேலைக்கும், பிள்ளைகள் பாடசாலைக்கும் சென்ற நிலையில் பெண் மட்டும் வீட்டில் சமைத்துக் கொண்டு நின்றுள்ளார்.

இதன்போது கார் ஒன்றில் வாள்களுடன் சென்ற இளைஞர் குழுவொன்று குறித்த வீட்டின் யன்னல், கதவு, கதிரைகள் மீது தாக்குதல் நடத்தியதுடன், பெண்ணையும் தாக்க முயற்சித்துள்ளனர். இதனையடுத்து அங்கிருந்து தப்பியோடிய பெண் அருகில் இருந்த கடைக்குள் நுழைந்துள்ளார். பின் தொடர்ந்து சென்ற இளைஞர் குழு, கணவன் எங்கே எனக் கேட்டு அச்சுறுத்தல் விடுத்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா, நெளுக்குளம் பொலிஸார் தாக்குதல் நடைபெற்ற இடத்தை பார்வையிட்டமையுடன் தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2022இல் வெளியிடப்பெற்றது.